பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., பி.எல்.

மலர்: 20] சென்னை: ஆடி 5 (20—7—72) வியாழன் — வெளியூர்: ஆடி 6 (21—7—72) வெள்ளி [இதழ்: 31

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டம்

சென்னை, ஜூலை 20—

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டம், ஆகஸ்டு 9-ந் தேதி காலை 10-மணிக்கும், மேலவை மாலை 4-மணிக்கும் கூடும்.

சுதந்தர வெள்ளி விழாவை முன்னிட்டு ஆகஸ்டு 14-ந் தேதி நள்ளிரவு 12-மணிக்கு சட்டப் பேரவை--மேலவை கூட்டுக் கூட்டம் நடைபெறும்.

இந்தக் கூட்டத் தொடரில் 4 மசோதாக்கள் மீது முடிவு செய்ய வேண்டியிருப்பதால், கூட்டம் 10 நாட்கள் நடைபெறக்கூடும்.

தென் மண்டலக் குழுக் கூட்டம்

தலைமையமைச்சர் தலைமை தாங்குவார்

முதலமைச்சர் கலைஞர் ஐதராபாத் செல்வார்

சென்னை, ஜூலை 20—

தமிழ்நாடு--ஆந்திரம்--மைசூர்--கேரளம் ஆகிய தென் மாநில முதலமைச்சர்கள் கலந்து கொள்ளும் தென் மண்டலக் குழுக் கூட்டம் ஜூலை 26-ம் நாளன்று ஐதராபாத்தில் நடைபெறும்.

இம்மாநாட்டிற்கு மத்திய அரசு உள்துறை அமைச்சர் தலைமை தாங்குவது வழக்கம்; இன்று அப்பொறுப்பையும் ஏற்றிருக்கும் தலைமையமைச்சர் இந்திரா காந்தி இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்குவார்.

உள்துறை துணையமைச்சர் கே. சி. பந்த், உள்துறை செயலாளர்--துணைச் செயலாளர் ஆகியோரும் இக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஜூலை 25-ந் தேதியன்று விமானம் மூலம் ஐதராபாத்துக்குப் புறப்பட்டுச் செல்கிறார்; மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு 27-ந் தேதியன்று விமானம் மூலம் சென்னை திரும்புவார்.

சென்னையில் காவிரி நீர் தகவல் திரட்டும் குழு

சென்னை, ஜூலை 20—

காவிரி நீர் பற்றித் தகவல் திரட்டும் குழு, திருவனந்தபுரத்திலிருந்து சென்னை வந்து சேர்ந்தது; தமிழ்நாட்டில் இக்குழு மூன்று நாட்களுக்குத் தங்கியிருக்கும்.

பி. ஆர். அலுஜா, டாக்டர் ஜே. எஸ். படேல், கதிந்தா சிங் ஆகியோர் குழு உறுப்பினர்களாவர்.

விவசாயிகள் கோரிக்கையில் உடன்பாடு

முதல்வர் நடத்திய பேச்சுவார்த்தை சுமூகமாக முடிந்தது

கைதானவர்கள் விடுதலை-- வழக்குகள் கைவிடப்படும்

சென்னை, ஜூலை 20—

விவசாயிகள் சங்கக் கோரிக்கைகள் தொடர்பாக விவசாயிகள் நடவடிக்கைக் குழுப் பிரதிநிதிகளுடன், முதலமைச்சர் நடத்திய பேச்சுவார்த்தை நல்ல முறையில் முடிவுற்று உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

நேற்று மாலை 5-30 மணிக்குத் துவங்கிய பேச்சு இரவு 12 மணி வரை நடைபெற்றது; அதன் பிறகு, விவசாயிகள் நடவடிக்கைக் குழுப் பிரதிநிதிகள் முன்னிலையிலேயே உடன்பாடு ஏற்பட்ட விவரங்களை முதலமைச்சர் கலைஞர் வெளியிட்டார்.

பன்னிரண்டு கோரிக்கைகளில் ஒரு கோரிக்கை வற்புறுத்தப்படவில்லை; எஞ்சிய 11 கோரிக்கைகளில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் கிளர்ச்சியையொட்டி இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள்; அவர்கள் மீதுள்ள வழக்குகள் திரும்பப் பெறப்படும்; அரசு ஏற்கனவே அறிவித்துள்ள நீதி விசாரணை கைவிடப்படும்.

'விவசாயப் பணிகளுக்குப் பயன்படும் மின்சாரத்தின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும்' என்பதே விவசாயிகளின் முக்கியக் கோரிக்கையாகும்; இக்கோரிக்கை தொடர்பாகக் கீழ்க்காணும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

பயன்படுத்தப்படுகின்ற முதல் 100 யூனிட் மின்சாரத்துக்கு யூனிட்டுக்கு 12 காசு என்ற விகிதத்தில் வசூலிக்கப்படும்; 100 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்தும் மின்சாரத்துக்கு, ஒரு யூனிட்டுக்கு 11 காசு என்ற விகிதத்தில் வசூலிக்கப்படும்.

விவசாயிகள் சங்கச் செயற்குழுவின் கோரிக்கைகளும்--அவற்றில் ஏற்பட்ட உடன்பாடு விவரமும் இங்கு தரப்படுகிறது:—

கோரிக்கை 1:—மின் கட்டண உயர்வை ரத்து செய்யவேண்டும்; வறண்ட கிணறுகளுக்கு குறைந்த கட்டணம் போட்டிருப்பதை நீக்க வேண்டும்.

உடன்பாடு 1:—விவசாயக் காரியங்களுக்கான மின் கட்டணம் முதல்நூறு யூனிட்டுகள்வரையில் யூனிட் ஒன்றுக்கு 12 காசுவீதம் கட்டணம் வசூலிப்பதென்றும், நூறு யூனிட்டுக்குமேல் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 11 காசுவீதம் வசூலிப்பதென்றும் நிர்ணயிக்கப்படுகிறது.

கடன் பாக்கிகளுக்குத் தவணைச் சலுகைகள்

கோரிக்கை 2:—அரசாங்கக் கடன்--கூட்டுறவு, நிலவள வங்கிக் கடன் உட்பட எல்லாக் கடன் பாக்கிகளையும் வஜா செய்ய வேண்டும்; மோட்டார் பம்பு செட்டுகள்--கால்நடைகள்--விவசாயச் சொத்துக்களை ஜப்தி செய்வதை உடனடியாக நிறுத்தவேண்டும்.

உடன்பாடு 2:—(ஏ) மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் வறட்சி நிலை இருக்கிறதோ அங்கெல்லாம் கடன்களை வசூலிப்பதில் கடுமையான நடவடிக்கைகள் கூடாது என்று ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது; அது தொடர்ந்து செயல்படுத்தப்படும்; மேலும், வறட்சிப் பகுதிகளைக் கணக்கில் எடுப்பதற்கு வருவாய் வாரிய உறுப்பினர்கள் மாவட்ட வாரியாக ஆராய்ந்து--அந்த அடிப்படையில் விளைச்சல் இல்லாத பகுதிகளில் கடன் பாக்கிகளுக்குத் தவணை அளிப்பது போன்ற சலுகைகள் வழங்கப்படும்; இதற்கிடையில், ஏற்கனவே பிறப்பித்துள்ள அரசு ஆணையின்படி அதிகாரிகள், ஜப்தி போன்ற கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள்.

(பி) கிணறுகள் வெட்டுவதற்கு வாங்கிய கடன்களில் பலன் அளிக்காத கிணறுகளைப் பரிசீலித்துக் கடன் நிவாரணம் அளிப்பது பற்றி ரிசர்வ் பாங்கியிடம் எடுத்துக்கூறி ஆவன செய்ய முயற்சி மேற்கொள்ளப்படும்.

(சி) கூட்டுறவு நிறுவனங்களில் பினாமி கடன்கள் மூலமும், வேறு வகையிலும் தவறு செய்கிறவர்கள் மீது நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்படும்.

விவசாயப் பொருள்களுக்கு விலை நிர்ணயம்

கோரிக்கை 3:—விவசாயம் பண்டங்களுக்கு நம் (விவசாய சங்க) பிரதிநிதிகளும்--அரசுப் பிரதிநிதிகளும் சேர்ந்து விலை நிர்ணயம் செய்து அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்று விற்பனை செய்யவேண்டும்.

உடன்பாடு 3:—விவசாயப் பண்டங்களுக்கு அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்பதற்கு அரசாங்க வர்த்தகக் கார்ப்பரேஷன் (ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்) நிறுவுவதை கொள்கை அளவில் அரசு ஏற்றுப் பரிசீலிக்கும்; விவசாய விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வதற்காக விவசாயிகள் பிரதிநிதி உள்ளிட்ட குழு ஒன்றை அமைப்பதைப் பரிசீலிப்பதோடு, தேங்கியுள்ள பருத்தி முதலியவற்றைக் கொள்முதல் செய்வது பற்றி மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சிறிய விவசாயிகட்கு வருமான வரியில் சலுகை

கோரிக்கை 4:—பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியைக் கைவிடவேண்டும்; புதிதாகப் போடப்பட்டுள்ள நிலவரி--செஸ் வரிகளைக் கைவிடவேண்டும்; விவசாயப் பம்பு செட்டுகளுக்கும்--இரசாயன உரத்திற்கும் போடப்பட்டுள்ள வரியை ரத்து செய்யவேண்டும்.

உடன்பாடு 4:—சிறிய விவசாயிகளுக்கு விவசாய வருமான வரியில் சலுகை அளிப்பதுபற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்; அந்தச் சலுகைகள் உதாரணமாக ஏழரை ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் வருமான வரி இல்லை என்பதை பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் என்று ஆக்குவது பற்றியும், ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கிடுவதில்

(4-ம் பக்கம் பார்க்க)

ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் கருத்துக்களை முதல்வர்கள் மாநாட்டில் விவாதிப்பது முறையா?

நிகழ்ச்சிநிரலைக் கண்டு முதலமைச்சர் கலைஞர் அதிர்ச்சி-- அவசியமான நடவடிக்கையைத் தலைமையமைச்சர் எடுப்பார் என நம்பிக்கை

சென்னை, ஜூலை 20—

நில உச்சவரம்பு சம்பந்தமாகப் புதிய காங்கிரசுக் குழு தந்துள்ள அறிக்கை முதலமைச்சர்கள் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருப்பது பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிர்ச்சி தெரிவித்தார்.

"ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் கருத்துக்களை முதலமைச்சர்கள் மாநாடு விவாதிப்பது முறையாக இராது; இதைச் செய்வது என்றால், நில உச்சவரம்பு பற்றி எல்லா அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும் பெற்று அவற்றை விவாதிக்க வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

இதுபற்றி அவசியமான நடவடிக்கையை எடுக்குமாறு தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் வற்புறுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் தொடர்பாகச் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:—

"நிலச் சீர்திருத்தம் பற்றி ஆலோசிப்பதற்காக முதலமைச்சர்கள் கலந்துகொள்ளும் மாநாட்டிற்கு வருமாறு எனக்கு அழைப்பு வந்திருக்கிறது; இது குறித்துத் தலைமையமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்; அதில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறேன்:—

"முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு தமிழக அரசின் சார்பில் நிலச் சீர்திருத்தம் பற்றிச் சமதர்மக் கருத்துக்களை வெளியிட ஆவலோடு இருந்தேன்; இதற்கிடையில், அந்த மாநாட்டில் விவாதிக்கப் படும் பொருள் பற்றிய அட்டவணை கிடைக்கப் பெற்றேன்; அந்த அட்டவணை எனக்கு அதிர்ச்சியைத் தருவதாக உள்ளது.

அகில இந்திய காங்கிரசுக் கட்சியின் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட காங்கிரசுக் கட்சியின் குழு ஒன்று ஆய்ந்து அளித்துள்ள நிலச் சீர்திருத்தம் பற்றிய அறிக்கையையும்--சிபாரிசுகளையும் அந்த மாநாடு விவாதிக்க வேண்டுமென்று அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிறது.

தனிப்பட்ட ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த குழு ஒன்றின் சிபாரிசுகளை முதலமைச்சர்கள் மாநாட்டில் விவாதிப்பது உசிதமல்ல என்று கருதுகிறேன்.

அப்படி விவாதிக்கப்பட வேண்டுமானால், எல்லா அரசியல் கட்சிகளின் நிலச் சீர்திருத்தம் பற்றிய கருத்துக்களையும் கேட்டுப் பெற்று--அவைகளையும் சேர்த்து வைத்து விவாதிப்பது தான் பொருத்தமாக இருக்கும்; இதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருவதோடு அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்றும் நம்புகிறேன்."

கழக அரசைக் கவிழ்க்கக் 'காம்ரேடு'களின் சதி

[★]

குழப்பவாதிகளைத் தூண்டிவிட்டு குமாரமங்கலம் திரைமறைவில் உருவாக்கிய திட்டம்

வெற்றிகரமாக முறியடித்த கலைஞருக்கு 'கரண்ட்' இதழ் பாராட்டு

"தமிழகத்தில் விவசாயப் போராட்டத்தின் பின்னணியில் இருந்த இடதுசாரிக் காங்கிரசுக்காரர்களின் மீதும், 'காம்ரேடு' குழப்பவாதிகளின்மீதும், தமிழக முதலமைச்சர் கடந்த வாரம் எடுத்த உறுதியான நடவடிக்கை, தி. மு. கழக அரசைக் கவிழ்க்க எண்ணிய காம்ரேடுகளின் சதியை வெற்றிகரகாக முறியடித்துள்ளது"

என்ற பம்பாயிலிருந்து வெளிவரும் 'கரண்ட்' ஆங்கில வார ஏடு (15—7—72 இதழில்) எழுதியுள்ளது; அந்த இதழ் மேலும் கூறுவதாவது:—

"சட்டம் — ஒழுங்கைச் சிதறடித்துத் தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நிலைநிறுத்த மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் — என்ற நோக்கத்தை உள்ளடக்கிய இந்தச் சதியை ஆதரித்து இந்திரா காங்கிரசில் நுழைந்துள்ள 'காம்ரேடு' உருக்கு அமைச்சர் மோகன் குமாரமங்கலம், சென்னையிலும் — டில்லியிலும் பாடுபட்டதாகத் தெரிகிறது.

"அரசாங்க வேலை' என்று சொல்லிக்கொண்டு தனது 'காம்ரேடு'களை இரகசியமாகச் சந்திக்கக் குமாரமங்கலம் மேற்கொண்ட பயணங்கள், முதலமைச்சரால் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டுவந்தன; 'இதனால், இந்திரா காங்கிரசு மற்றும் 'காம்ரேடு' போன்றவர்களால் குழப்பங்கள் உருவாக வழியுண்டு' என முதல்வர் அறிந்துகொள்வதற்கு வாய்ப்புக் கிட்டியது.

சிம்சன் கம்பெனித் தொழிலாளர்கள் கிளர்ச்சியின் மூலம் முதலில் குழப்பம் உருவாக்கப்பட்டது; 'காம்ரேடு'களின் கைங்கரியங்களை நன்கு உணர்ந்து முதலமைச்சர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள், மூன்று திங்களுக்குள் கிளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது; மேலும் உள்ளூர் 'காம்ரேடு'களுக்கு இது பலத்த அடியாகவும் இருந்தது.

தொழிலாளர் கிளர்ச்சியைத் தூண்ட முயன்று தோல்வியுற்ற 'காம்ரேடு'கள், கல்விக் கூடத்தின் பக்கம் கவனத்தைத் திருப்பி — 'ஆரம்பப் பள்ளி ஆசிரியர் போராட்டம்' என்ற பெயரில் கிளர்ச்சியைத் தொடங்கினர்; கிளர்ச்சிக்குப் பின்னணியில் இருந்த கம்யூனிச 'காம்ரேடு'கள் கைதான பின்னர் குழப்பம் தவிர்க்கப்பட்டது.

மூன்றாவதாக ஒரு பெரிய முயற்சியில் இறங்க இருந்த 'காம்ரேடு'களை, இந்த இரு தோல்விகளும் தடுக்கவில்லை; இதற்குள் குமாரமங்கலம், கழக அரசைக் கவிழ்க்க எண்ணிய 'காம்ரேடு'களின் சதித் திட்டத்திற்குத் திட்ட அமைச்சர் சுப்பிரமணியத்தின் ஆதரவைப் பெறுவதில் வெற்றிபெற்றார்!

கட்டை வண்டிகளை வீதியில் நிறுத்தி — பல வழிகளிலும் மக்களின் அன்றாட அலுவல்களைத் தடை பண்ண எண்ணி — கடந்த திங்கள் ஓர் அர்த்தால் நடத்தப்பட்டது; கோவையில் கிடைத்த சிறிய வெற்றியினால் ஊக்குவிக்கப்பட்ட 'காம்ரேடு'கள் — மின் கட்டண உயர்வுபற்றி அரசின் நிலைமையை முதலமைச்சர் தெளிவாக்கியும் அது பற்றி உணராமல், (ஜூலை 5-ஆம் நாள்) மாநிலம் முழுவதும் ஒரு கிளர்ச்சியை உருவாக்கினர்.

"விவசாயப் பகுதியின் மூலம், அதிக வருமானத்தைப் பெருக்க வழி செய்யுமாறு மத்திய அரசு மேற்கொண்ட முடிவையே தமிழகம் செயலாற்றுகிறது" என்ற முதலமைச்சரின் விளக்கமும்—வேண்டுகோளும் பலன் அளிக்காத நிலையில், அரசியல் ரீதியாகப் பிரச்சினை அணுகப்பட்டது!

போராட்டத்திற்கு ஒரு வாரத்திற்குமுன் தமிழக அரசு, கிளர்ச்சிக்குப் பின்னணியில் இருந்த காம்ரேடுகளையும் — ரஜனி பட்டேல் வழிவந்து இந்திரா காங்கிரசில் ஊடுருவியுள்ள இடதுசாரிகளையும் கைது செய்து நடவடிக்கை மேற்கொண்டது.

'கழக அரசைக் கவிழ்க்க இது தான் நல்ல தருணம்' என்று எண்ணிய திட்ட அமைச்சர், விவசாயிகள் போராட்டப் பிரச்சினையைக் காங்கிரசு செயற்குழு மூலம் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

திட்ட அமைச்சர் சுப்பிரமணியத்தின் விளக்கத்தைக் கேட்பதற்குமுன், தமிழக முதலமைச்சருடன் தொடர்பு கொள்வதே சரியான வழி' என்ற முடிவுக்கு வந்து தலைமையமைச்சர் ஜூலை 7-ம் நாள் இரவு முதலமைச்சருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்; காம்ரேடுகளின் வன்முறை முயற்சியையும், சட்டம்—அமைதியைக் காக்கத் தமிழக அரசு எடுத்துக் கொண்ட நேர்மையான நடவடிக்கைகளையும் மற்றித் தலைமையமைச்சருக்குத் தமிழக முதலமைச்சர் தெளிவாக விளக்கியுள்ளார்; உண்மை முழுவதையும் உணர்ந்த தலைமையமைச்சர், மிகவும் அனுதாபத்துடன் நடந்து கொண்டதாகத் தெரிகிறது.

இதற்கிடையில், முதலமைச்சர், 'ஜூலை 15-ம் நாள் வன்முறை எதிர்ப்புத் தினமாகக் கொண்டாடப்பட வேண்டும்' எனவும், 'காம்ரேடுகளின் பொய்க் கோலங்கள் வெளிக் கொணரப்பட வேண்டும்' எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிலைமை இவ்வாறு இருந்தும், திட்ட — உருக்கு அமைச்சர்களின் ஆதரவு மூலம் காம்ரேடுகள், 'கழக அரசைக் கவிழ்க்கக் கிடைத்துள்ள அரிய வாய்ப்பைத் தவறவிட்டுவிடக் கூடாது' எனத் தலைமையமைச்சரிடம் வலியுறுத்துவதாகச் செய்திகள் சொல்கின்றன.

வன்முறைக் கிளர்ச்சியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டிற்குக் கழக அரசு நீதி விசாரணையை ஏற்படுத்தியுள்ளது; இதனால் காம்ரேடுகள் திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை.

இதற்காகவும், காம்ரேடுகளின் சதியை மிகச் சீரிய முறையில் வெற்றிகரமாக முறியடித்ததற்காகவும் நாங்கள் சொல்வது 'நன்று — கருணாநிதி — நன்று' என்பதுதான்!"

மதுரை மாநாடு

கடைகள் ஏல அறிவிப்பு

"மதுரையில் ஆகஸ்டுத் திங்கள் 4, 5, 6 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. கழக ஐந்தாவது மாநாட்டில் (ரேஸ் கோர்ஸ் மைதானம்) கடை வைத்து வியாபாரம் செய்து கொள்ள உரிமை 21—7—72 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் தமுக்க மைதானத்திலுள்ள மாநாட்டு அலுவலகத்தில் ஏலம் விடப்படும்"

என்று, மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் எஸ் முத்து எம்.எல்.சி. அறிவிக்கிறார்.

மதுரை மாவட்ட தி.மு.க. 5-வது மாநாடு

தி.மு.க. பிரதிநிதிகள் பற்றிய விளக்கம்

1972 ஆகஸ்டு 4 5, 6 (வெள்ளி — சனி — ஞாயிறு) ஆகிய நாட்களில் மதுரையில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டுப் பிரதிநிதிகள் பற்றிக் கீழ்க்காணும் விளக்கம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:—

1. மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு கிளையின் செயலாளரும்—அவருடன் அந்தக் கிளையின் மேல் அமைப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உறுப்பினரும் மாநாட்டின் பிரதிநிதிகளாகக் கருதப்படுவர்.
2. பிரதிநிதியின் பெயர் — முகவரி — கிளை ஆகிய தெளிவான விவரங்களையும், அவைகளுடன் பிரதிநிதிகள் கட்டணமாக ரூ 5 வீதம் பணவிடை (எம்.ஓ) மூலம் மாநாட்டுச் செயலாளருக்கு உடனடியாக அனுப்பிவைக்க வேண்டும்.
3. மாநாட்டுச் செயலாளரிடத்தில் தொகை அனுப்பியதற்கான சான்றினைக் காண்பித்துப் பிரதிநிதிக்குரிய பாட்ஜை (வில்லை) களை மாநாட்டுக்கு முதல் நாளன்று நேரில் ஒவ்வொரு பிரதிநிதியும் பெற்றுக்கொள்ள வேண்டும்.
4. பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் மற்றும் பிரதிநிதிகள் அனுப்பும் தீர்மானங்கள் பற்றிய விவரங்களை அவ்வப்போது மாநாட்டு வரவேற்புக் குழு அறிவிக்கும்.

—இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

வாழ்நாளில் மறக்க மாட்டேன்!

[தில்லைவில்லாளன் எம்.பி.]

அண்ணனின் தாள் பணிந்து இந்த வரிகளை எழுதுகிறேன்.

இந்த இயக்கத்தில், அண்ணனின் அன்பினால் ஒரு 'செல்லப் பிள்ளை'யாகவே அடிநாள் தொட்டு இருந்துவந்தேன்.

அவரோடு நிழலாகி இருந்த காலமும் உண்டு — விட்டு விட்டு வந்து ஓடிக் கிடந்த காலமும் உண்டு!

ஆனால், அவரது கடைசி மூச்சு வரை—அவரது அன்பினைப் பெறுவதில் எவருக்கும் இரண்டாவதாக இருந்ததில்லை; அந்த ஒரு 'பலம்', இன்னும் எத்தனைக் காலம் வேண்டுமானாலும்—இந்த இயக்கத்தில் எந்தக் கோடியில் நிறுத்தப்பட்டாலும் — பணிபுரியும் ஆற்றலைத் தருகிறது!

அந்த அண்ணன் வழியில் — அடுத்துள்ள அண்ணன்மார்களும் அன்பினைச் செலுத்துவதால், தொண்டு மனம் சருகாகாமல் பசுமையுடன் காட்சியளிக்கிறது!

'தமிழகத்தின் எல்லையை விட்டுத் தாண்டிட வாய்ப்பு வரும்' என்று கருதியதில்லை; தமிழகத்திலேயே, சென்று கண்டு மகிழும் இடங்கள் பல—இன்னமும் செல்லவில்லை; இப்படி உண்மை இருக்க, 'வேறெங்கு செல்லப்போகிறோம்' என்று எண்ணிக்கிடந்தேன்.

'விமானம் ஏறி வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும்' என்று அந்த நாளில் எண்ணியதுமில்லை — விரும்பியதுமில்லை.

வேடிக்கைச் சம்பவம் ஒன்று கேளுங்கள்; அண்ணனுடன், காரில் மதுரைக் கூட்டத்திற்குக் கிளம்பினேன்; செங்கற்பட்டு வரை சென்றோம் — காரில்; 'ஆர்மிசா' எரிந்து விட்டது; அதனைச் சரிசெய்து மதுரை செல்வதென்றால், குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் போய்ச் சேர முடியாது; ஆகவே அண்ணன், 'சென்னைக்குத் திரும்பலாம்' என்றார்கள். காரை அங்கேயே விட்டு விட்டுச் சென்னை திரும்பினோம்; மீனம்பாக்கம் சென்றோம்; 'விமானத்தில் செல்லலாம்' என்று உள்ளே சென்றோம்; இருவரும் செய்வதாகவே சென்றோம்; டிக்கெட் வாங்கப் பணத்தைப் பார்த்தால் — குறைகிறது; பிறகு, விமானத்தில் அண்ணனை அனுப்பிவிட்டுத் திரும்பி வந்தேன்; மதுரை முத்து அவர்களுக்குத் தொலைபேசி மூலம் அண்ணன் வரும் விவரம் தெரிவித்தேன்; அண்ணன் கட்டளைப்படி, காரை சரிசெய்திடச் சென்றேன்; அது சரியாகாததால் இரயிலேறி — ஆத்தூரில் அண்ணனைச் சந்தித்தேன்.

அந்தக் கூட்டத்திற்கு நமது முன்னாள் நண்பர் சுப்பிரமணியம் தலைமைவகித்தார்; துவக்கத்தில் மழை வந்துவிட்டது; நான் பேசும்போது, 'மழைக்கு அஞ்சாதீர்கள்; நாம் என்ன — உப்பு மூட்டைகளா கரைந்துவிட; சர்க்கரை மூட்டைகளா — இளகிவிட' என்று பேசினேன்.

ஆனால் அடைமழை பெய்ததால் கூட்டம் நிறுத்தப்பட்டது.

மேடைக்கு அருகிலிருந்த டீக் கடையில் எல்லோரும் ஒதுங்கி நின்றோம்; அப்பொழுது கழகத் தோழர் ஒருவர் — முகம்மதிய நண்பர் — நான் சொன்ன வார்த்தைகளை வெடவெடவென்று உதறலுடன் திருப்பிச் சொன்னார்; அனைவரும் சிரித்தனர் — அண்ணனும் சிரித்தார்.

பிறகு, எங்கு மழை வந்தாலும், இந்தச் சம்பவத்தை அண்ணன் தோழர்களிடமெல்லாம் கூறி — நகைச்சுவைக் களமாக்கி மகிழ்வார்.

அண்ணன் நினைவு வந்துவிட்டால், எல்லாம் மறந்துவிடுகிறேன்; சொல்ல வந்தது — 'விமானத்தில் ஏறிப் போகக் கூட வாய்ப்பு இல்லாமல் தான் — ஆரம்ப நாட்களில் — இந்த இயக்கத்தை வளர்த்தார்கள்' என்பதை!

இன்று எனக்கு இங்கிலாந்து அரசாங்க அழைப்புக் கிடைத்து அங்கு செல்கிறேன் என்றால், பூரித்துப் போயிருப்பார் — அந்த அண்ணன் இல்லை — 'கொடுத்து வைத்தது' அவ்வளவுதான்!

இந்த ஆண்டு ஜூன் மாதம் 6-ம் நாள் காலை 10 மணி — என் வாழ்நாளில் மறக்க முடியாத நேரம்!

அன்று நமது டாக்டர் கலைஞர் தலைமை வகித்து என்னை வாழ்த்தி வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தார் — அவருக்கு நன்றி கூறுகின்றேன்.

அவருடன் சேர்ந்து மாண்புமிகு மதி — என். வி. என். — சகோதரர் இராம. அரங்கண்ணல் — நீதிபதி சகோதரர் கே. என். முதலியார் — சிலம்புச் செல்வர் ம. பொ. சி. ஆகியோர் வாழ்த்துரை கூறி வழியனுப்பி வைத்தனர்.

திருவாளர் டி. கே. சண்முகம், இசைச் செல்வர் சி. எஸ். செயராமன் போன்றோர் வந்திருந்து வாழ்த்தினர்.

கழகத்து இளஞ்சகோதரர் கிட்டு முன்னின்று இந்த விழாவினை நடத்தினர்.

இவர்களுக்கு நன்றி கூற நினைக்கின்றேன்—உணர்ச்சி குழம்பி நிற்கின்றேன்.

சென்னைக்கு வந்த நாள் முதல் என் வாழ்க்கை ஏட்டில் இடம் பெற்ற பெரியவர் வெங்கடாசலம் அவர்களின் திருக்குமாரன் சம்பத் — இன்னும் வழக்கறிஞர் இராசன் — இயக்கப் பழம்பெரும் தோழர் எஸ். கே. சாமி ஆகியோரை நான் வாழ்நாளில் மறக்க முடியாது.

இவர்களுக்கு எல்லாம் பின்னிருந்து என் அன்புச் சகோதரர் நாகராசன், அன்பினைக் கொட்டிக் கொட்டி காரியம் செய்தாரே — அவருக்கு நன்றி கூறிட நானும் வார்த்தைகள் தேடுகிறேன் — இன்னமும் கிடைக்கவில்லை; இனி எங்கே கிடைக்கப் போகிறது?

இது மட்டுமா? பிறந்த மண் தில்லையிலிருந்து அன்புத் தோழர்கள் பலர் வந்து — விமான நிலையத்தில் நின்று வழியனுப்பிவைத்த காட்சி வாழ்வில் மறக்கக் கூடியதா?

எண்ணற்ற தோழர்கள் இல்லத்திற்கு நேரில் வந்து வாழ்த்துக் கூறினர்.

தந்தி — தபால்கள், சென்னைக்கும் — டெல்லிக்கும் அனுப்பி வாழ்த்தினர்.

அவர்களுக்கெல்லாம் இந்த எளியவனிடம், ஒரு நம்பிக்கை — பாசம் — அன்புப் பிடிப்பு!

"இந்தப் 'பயல்' அண்ணன் தயாரிப்பு; ஆகவே, இட்ட பணியைத் திட்டமிட்டு முடித்திடுவான்" என்ற குறுஞ் சிரிப்புடன் உள்ளத்தில் ஊசலாடும் எண்ணம்; அதனால், அன்பினால் முழுக்காட்டி அனுப்பிவைத்தனர்.

இந்த அசைக்க முடியாத பெரும் பலத்துடன் செல்கிறேன்.

இங்கிலாந்து, இத்தாலி, சுவிட்சர்லாந்து, பிரான்சு, மேற்கு ஜெர்மனி, குவெய்த்—என்று பல்வேறு நாடுகளுக்கும் சென்று பயனுள்ள அனுபவத்துடன் திரும்பியுள்ளேன்.

இந்த இடங்களில் சேகரித்த புதிய நல்லறிவினைத் தமிழகத்திற்குப் பயன்படுத்துவேன.

அன்புத் தோழர்கள் அனைவருக்கும் நன்றி — நன்றி — நன்றி என்று கூறி மீண்டும் என் பணி துவக்குகிறேன்.

முதலமைச்சர் தலைவிதியை நிர்ணயிப்பது பத்திரிகைகள் அல்ல!

[★]

ஆற்றும் பணிகளால்—நிறைவேற்றும் திட்டங்களால் மக்களின் ஆதரவைப் பெற்றவர் கலைஞர்!

நாக்கில் நரம்பில்லாமல் தூற்றும் 'துர்க்குறி'களுக்கு 'சத்திய கங்கை' சாட்டை

'ஒரு முதலமைச்சரின் தலைவிதியை பத்திரிகைகளா நிர்ணயிக்கின்றன? அவர் செய்யும் அரிய பொதுமக்கள் பணி தான் நிர்ணயிக்கிறது; அவர் காட்டும் நிதானமும்—பொறுமையும் — பெருந்தன்மையும்தான் நிர்ணயிக்கின்றன; அவர் செய்யும் நன்மையான காரியங்களும் — கொண்டுவரும் நலவாழ்வுத் திட்டங்களும்தான் நிர்ணயிக்கின்றன; அவருடைய சகிப்புத்தன்மையும்—அரவணைத்துக் கொண்டு செல்லும் சாமர்த்தியமும்—வாழும் வாழ்வும்தான் நிர்ணயிக்கின்றன!

"'இவர் ஜனக மகாராஜனைப் போல் அரசாண்டார்—இவர் மனுநீதி சோழனைப்போல் ஆட்சி செலுத்தினார்—இவர் சிபிச் சக்கரவர்த்திபோல் வாழ்ந்தார்—இவர் அசோகனைப்போல் ஆண்டார்' என்றெல்லாம் மக்கள் சொல்கின்றபோது, அவரவர் சொந்த சிறப்பியல்புகளையே நினைவுகூர்ந்து சொல்கின்றனர்!

"இந்தச் சிறப்பியல்புகளைக் கொண்ட மனிதரை எந்தப் பத்திரிகையின் எந்தத் தலையங்கமும் — கண்டனமும் திரையிட்டு மறைத்துவிட முடியாது."

இவ்வாறு, திரு. கீரதனை ஆசிரியராகக் கொண்ட 'சத்திய கங்கை' என்ற இதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது; அத்தலையங்கம் வருமாறு:—

தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் நடைபெற்ற தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சி.-யின் 67-வது பிறந்தநாள் விழாவில் நம்முடைய மதிநுட்பம் வாய்ந்த முதலமைச்சர் திரு. கலைஞர் கருணாநிதி அவர்கள் பேசும்போது — பேச்சோடு பேச்சாக, 'தினமும் காலையில் பத்திரிகைகளை முதலில் படிக்கிறேன்; கண்ணை மூடிக்கொண்டு என்மீது வசைமாரி பொழிந்திருப்பதைக் கண்டு வேதனையடைந்த உள்ளத்துடன் வெளியே வருகிறேன்; வந்தால், நன்றியும் பாசமுமாக வந்து காத்திருக்கும் பொது மக்களைக் கண்டதும் சோர்வு போய் உற்சாகம் பொங்கி வருகிறது' என்று சொன்னார்; மிகவும் நியாயமான வார்த்தை.

பெற்ற பொன்னாட்டை தாயினும் மேலாக நேசிக்கும் தலைமகன் நம் முதல்வர்; அவர் தமிழ்ப்பற்றும் — நாட்டுப் பற்றும் எல்லாரும் அறிந்த ஒன்று!

மாபெரும் இயக்கம் ஒன்றின் தளபதியாக இருந்து வழி நடத்திக் கொண்டு வந்தவர் — வருபவர்; தன் தலைவனைப் பிரிய நேர்ந்ததும், அவர் அமர்ந்த அரியாசனத்தையே அவராகக் கருதி - பரதனைப் போல வழிபட்டு ஆண்டு வருபவர்; நாளுக்கொரு திட்டம் தீட்டி அதை நிறைவேற்ற—மக்கள் நல்வாழ்வு மலர அயராது பாடுபட்டு வருபவர்!

அவர் முதலமைச்சரானதும், அவரிடம் வந்து குடிகொண்ட பொறுமை — நிதானம் ஆகிய மேலான குணங்களைக் கண்டு 'சத்யகங்கை' வியந்து பாராட்டி எழுதியது — 'அறிஞர் அண்ணாவின் இடத்திற்குத் தக்கவர் இவரேதான்' என்று எழுதிற்று.

இப்போதோ, திட்டங்கள் தீட்டுவதிலும் — சீர்திருத்தங்களைச் செய்வதிலும் — கழகத்தை வழிநடத்தி வெற்றிப் பாதையில் செலுத்துவதிலும் — மாற்றார்களின் அவதூறுகளிலிருந்து காப்பதிலும் அண்ணாவைவிடப் பன்மடங்கு வேகத்துடனும் — சக்தியுடனும் — பயனுள்ள முறையிலும் திரு. கருணாநிதி செயலாற்றி நாட்டு மக்கள் அனைவருடைய வியப்புக்கும் ஆளாகி வருகிறார்.

இப்படிப்பட்ட நிலையில், வெறும் துவேஷத்தையே அடிமனத்தில் வளர்த்துக்கொண்டு சிலர் ஓயாது பொய்யையும், புரட்டையும் வாரி இறைத்தால், யார் மனம்தான் புண்படாது!

ஆனால், சில குறிப்பிட்ட பத்திரிகைகளும் — மனிதர்களும் இந்தப் பெருந்தன்மையை மறந்து, எப்போது பார்த்தாலும் தங்களுக்குப் பிடிக்காதவர்கள்மீது நாள்தோறும் சேற்றை வாரிப் பூசி வருகிறார்கள்! தேடித் தேடிச் சேற்றை எடுத்து வருகிறார்கள் — கற்பித்து எழுதுகிறார்கள்!

ஒரு பத்திரிகை—மிக்க வருத்தத்துடன் சொல்லுகிறோம்—திரு. கருணாநிதி மிகச் சுறுசுறுப்பாகச் செயல்படுவதைக் கண்டு மனம் பொறாமல், 'ஆச்சு — இன்னும் சில நாட்கள்தான்; கண் போயே போய்விட்டது; வயிற்றில் ஏதோ ஒன்று பயங்கரமாக உலாவிவருகிறதாம்; இன்னும் சில நாட்கள் உயிரோடு இருந்தால் அதிகம்; ஆகா — அப்படி மட்டும் நேர்ந்துவிட்டால், கழகம் குளோஸ் — சமாதி — பர்க்கயா' என்று கண்ணை மூடிக்கொண்டு எழுதிற்று! யாரை என்று சொல்ல வேண்டியதில்லை!

நல்லவேளையாக, அந்தத் 'துக்கிரி நா'வுக்கு ஆண்டவன் வலிமை தரவில்லை!

மனிதன் தவறு செய்யும்போது கண்டிக்கலாம்; எப்போதுமே கண்டித்து வசைமாரி பொழிந்து கொண்டிருந்தால், யாருக்குத் தான் மனம் வேதனைப்படாது? அதுவும் பொதுக காரியம் செய்பவர்களுக்கு எத்தனை வேதனையளிக்கும்?

பத்திரிகைகளைப் பார்த்து மனவேதனைப்பட்டு துடித்து வருகின்ற முதன் மந்திரியின் மனத்திற்கு ஆறுதலும் புத்துயிரும் அளிக்கும் பொதுமக்களை எத்தனைப் பாராட்டினாலும் தகும்.

இராஜாஜி முதல் மந்திரியாக இருந்தபோது இப்படித்தான் சொன்னார்கள்; சொல்வதற்கு வேறு ஒன்றும் கிடைக்காதவர்கள், அவர் வீட்டுக் கிணற்றடிக்குத் தேடிக்கொண்டு போனார்கள்; போனவர்கள், அவசர அவசரமாகத் திரும்பி வந்தார்கள்; 'கேட்டீர்களா — நம் சென்னை ராஜ்ய முதல்வர் என்ன செய்கிறார் தெரியுமா' என்று கேட்டார்கள்.

"என்ன செய்கிறார்?"

"இரகசியமாக ஏதும் செய்யத் தெரியாதவர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோமல்லவா — பாருங்கள் — மனுஷர், வேட்டி துவைத்துக் கொண்டிருக்கிறார்!"

உடனே, "ஆகா... ஆகா... ஆகா..." என்று நாலாபுறமும் சத்தம் உண்டாயிற்று.

"என்னது — வேட்டியையா?"

"ஆமாம்; வேட்டி துவைத்துக்கொண்டிருக்கிறார் — வேட்டியை!"

"நல்ல வேளை — புடவையை இல்லையே" என்று ஒரு முனகல் கேட்டது!

"சீச்சி — உம்மைப்போல என்று நினைத்துக் கொண்டீரா" என்றது பதிலுக்கு ஒரு குரல்; அந்த முனகல் அடங்கிற்று!

இராஜாஜி விஷயத்திலேயே இப்படி என்றால், சாமான்யர்களிலும் சாமான்யராகத் தம்மைக் கருதிக்கொள்ளும் திரு. கருணாநிதியைப் பற்றிக் கேட்பானேன்?

இன்னும் சில நாட்கள் போனால், சொல்வதற்குக் கருணாநிதி விஷயத்திலும் ஒன்றும் இல்லாமல் போய்விடும் என்றே தோன்றுகிறது!

அப்போது அவரையும், "தெரியுமா சேதி — கருணாநிதி கவிதை எழுதுகிறார்; கவிதை—எப்பேர்ப்பட்ட பயங்கர தவறு; கேட்கவே மெய் பதறுகிறதே" என்று திரு. கருணாநிதியின் அரசியல் எதிரிகள் சொல்லும்படி நேரலாம்தானே?

ஆகவே, இப்படிப்பட்ட புண்ணியவாளர்கள் வாழும் திருநாட்டில் மனோபாவம் இப்படித்தான் இருக்கும் என்று தெளிந்து — சமாதானப்படுத்திக் கொண்டு — மேமே நம் காரியத்தைக் கவனித்துக் கொண்டு போவதுதான் சிலாக்கியம்!"

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாட்டு அலுவலக முகவரி

ஆகஸ்டு 4, 5, 6 ஆகிய நாட்களில் மதுரையில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டு அலுவலகம் கீழ்க்காணும் முகவரியில் அமைக்கப்பட்டுள்ளது:—

மதுரை மாவட்ட தி. மு. க.
மாநாட்டு அலுவலகம்
1-ம் பகுதி மங்கம்மாள் சத்திரம்,
மதுரை—1.

தொலைபேசி எண்:
31301

சர்க்கரைக்குப் பஞ்சம் வரும்

ஆலைகள் சங்கத் தலைவர் எச்சரிக்கை

பம்பாய், ஜூலை 19—
"கரும்பு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நீண்ட காலக் கொள்கை ஒன்றை மத்திய அரசு உருவாக்காவிட்டால், அடுத்த ஆண்டு இந்தியாவில் என்றும் இல்லாத சர்க்கரைப் பஞ்சம் ஏற்படும்"

என்று இந்திய சர்க்கரை ஆலைகள் சங்க முன்னாள் தலைவரான எஸ் கே. சோமய்யா கூறினார்.

திருச்சி — புதுவை விரைவுப் பேருந்து

சென்னை, ஜூலை 19—
தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறை ஜூலை 20-ந் தேதியிலிருந்து திருச்சி—புதுச்சேரிக்கிடையே எக்ஸ்பிரஸ் பஸ்கள் விட முடிவு செய்துள்ளது.

இந்த எக்ஸ்பிரஸ் பஸ்கள் பெரம்பலூர் — தொழுதூர்—உளுந்தூர்ப்பேட்டை — மடப்பட்டு - விழுப்புரம் வழியாகச் செல்லும்.

திருச்சியிலிருந்து காலை 6-30 மணிக்கும் புறப்படும்; புதுச்சேரியிலிருந்து மாலை 4 மணிக்கும் புறப்படும்.

நேரம் 5 மணி; கட்டணம் ரூ. 8-40.

வங்க தேசத்துக்கு அங்கீகாரம்

பாகிஸ்தான் நாடாளுமன்றம் விவாதிக்கும்

இஸ்லாமாபாத், ஜூலை 19—
"அரசியலமைப்புச் சட்டம் தயாரிக்க அடுத்த மாதம் பாகிஸ்தான் தேசிய சட்டமன்றம் கூடும்போது வங்காள தேசத்தை அங்கீகரிக்க அதன் ஒப்புதலைப் பெற இயலும்" என அதிபர் பூட்டோ நம்புகிறாராம்.

"ஆகஸ்டு 14-ந்தேதி தொடங்கும் தேசிய சட்டமன்றத்தின் அடுத்த கூட்டத்தில் வங்காள தேசப் பிரச்சினை விவாதத்துக்கு வரும்" என பூட்டோ தெரிவித்துள்ளார்.

"சட்டமன்றத்துடன் ஆலோசனை கலந்து, அதன் ஒப்புதல் பெறாமல் வங்காள தேச அங்கீகாரிப்பு இல்லை" என பூட்டோ உறுதி கூறியிருக்கிறார்.

தலைமை நீதிமன்றத்தில் தமிழக அரசின் அப்பீல்

எல்லா மாநிலங்களின் அட்வகேட்டுகளுக்கும் அழைப்பு

புதுடில்லி, ஜூலை 19—
தமிழ்நாட்டில் நீதிமன்றக் கட்டணங்களை உயர்த்தி இயற்றப்பட்ட விதிகள் செல்லுபடியாகாதென்று சென்னை உயர் நீதிமன்றம் சில 'ரிட்' மனுக்களை ஏற்றுக்கொண்டு தீர்ப்பளித்திருந்தது.

இதை எதிர்த்துத் தமிழ்நாடு அரசு தலைமை நீதிமன்றத்தில் அப்பீல் செய்திருக்கிறது.

இது மிகவும் முக்கியமான பிரச்சினை என்று தலைமை நீதிமன்றம் கருதியது; ஆகவே, எல்லா மாநிலங்களின் அட்வகேட்-ஜெனரல்களும் நீதிமன்றத்துக்கு வந்து தம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நோட்டீசு அனுப்பப்படுகிறது.

கல்வித் துறையில் இதுவரை கண்ட சீர்திருத்தம் என்ன?

அமெரிக்கரைப் பின்பற்றும் அவல வாழ்வு நீங்குமா?

சென்னை, ஜூலை 19—
"கல்வி முறையைப் பற்றி நாள்தோறும் பத்திரிகைகளில் ஏதாவது செய்தி வெளியாகிக் கொண்டேயிருக்கிறது. கல்வி முறையைச் சீர்திருத்தப் பல்வேறு குழுக்களும் — கமிஷன்களும் அமைக்கப்படுகின்றன; ஆனால் துரதிருஷ்டவசமாக இதுவரையில், உண்மையான கல்விச் சீர்திருத்தம் மிக மிகக் குறைந்த அளவில்தான் செய்யப்பட்டுள்ளது.

"வாழ்க்கையுடன் இணைந்த முறையில் கல்விச் சீர்திருத்தம் ஏதும் செய்யப்படாததால், மாணவர்களிடையே வெறுப்பும் — அமைதியின்மையும் அதிகரிக்கிறது; எனவே, 'நல்ல மனிதர்களை உருவாக்க வேண்டும்' என்னும் நோக்கத்துடன் நம் நாட்டின் வாழ்வு முறையையொட்டிக் கண்டிப்பான ரீதியில் கல்வித் துறையில் ஆக்கபூர்வச் சீர்திருத்தங்களைச் செய்வது அவசியமாகும்.

"கொலை — கொள்ளை — பாலுணர்வு ஆகியவற்றைப் பற்றிய மலிவான அமெரிக்கப் புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் நம் மாணவர்களிடையே பரவியுள்ளது; எண்ணத்திலும் — செயலிலும் — நடையுடை பாவனைகளிலும் அமெரிக்கர்களைப் பின்பற்ற நமது மாணவர்கள் பெரிதும் விரும்புகின்றனர்; இந்தப் போக்கு சரியல்ல!

"கல்வி — அரசியல் — வர்த்தகம் — பொது வாழ்வு ஆகிய எல்லாத் துறைகளிலும் நேர்மையும், நன்னடத்தையும் குறைந்து வருகின்றன; ஊழலும் போலித்தனமும் பெருகி வருகின்றன."

—ஜெயப்பிரகாஷ் நாராயணன்

(குரோம்பேட்டையிலுள்ள வைணவ மகளிர் கல்லூரியில் ஆற்றிய உரையில்)

சிம்சன் பிரச்சினை :

இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தையின் நிலைமை

அமைச்சர் என். வி. நடராசன் தகவல்

சென்னை, ஜூலை 20—

மூடப்பட்டுள்ள சிம்சன் தொழிற்சாலைகளை மீண்டும் திறக்கச் செய்து -- ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்காக நேற்றிரவு அரசுத் தலைமைச் செயலகத்தில் -- தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையில் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தையின் முடிவில் அமைச்சர் என்.வி.என். அவர்கள், செய்தியாளரிடம் கூறியதாவது :—

"இந்தத் தொழிற்சாலையை மீண்டும் வெகு விரைவில் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதில் மாநில அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதைப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட தொழிலாளர் தரப்பினருக்குப் -- நிர்வாகிகள் தரப்பினருக்கும் தெளிவாகத் தெரிவித்துவிட்டேன்.

'சஸ்பெண்டு' செய்யப்பட்ட 243 தொழிலாளர்களைத் தவிர, மற்றவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதாகவும், 'சஸ்பெண்டு' செய்யப்பட்டவர்கள்மீது உள்ள விசாரணையை விரைவில் முடித்துவிட ஏற்பாடு செய்வதாகவும், விசாரணையில், அவர்கள் மீது தவறு ஏதுமில்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டால், அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வதாகவும் சிம்சன் நிர்வாகிகள் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விசாரணையை விரைவில் முடிக்க வேண்டும் என்று அரசு ஒரு காலக்கெடு நிர்ணயிக்க விரும்பினால் அதையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்' என்று நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

"'தொழிற்சாலை திறக்கப்பட்டாலும், படிப்படியாக மூன்று வார காலத்திற்குள்தான் பல்வேறு பிரிவுகளிலும் முழு உற்பத்தி தொடங்கும்; ஆதலால், இந்த 243 தொழிலாளர்கள் நீங்கலாக மீதமுள்ளவர்களைப் படிப்படியாகத்தான் வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியும்" என்றும் நிர்வாகிகள் கூறியிருக்கிறார்கள்.

"கொலைக் குற்ற வழக்கில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒரு சிலர் நீங்கலாக மீதமுள்ள அனைவரையும் தொழிற்சாலை திறக்கும்போதே வேலைக்கு எடுத்துக்கொண்டு விசாரணை நடத்தட்டும்; விசாரணை முடிவில் அவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டால், பிறகு நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்கட்டும்" என்று வி. பி. சிந்தன் கூறினார்; சென்ற தடவை கூறிய கருத்தையே இப்போதும் அவர் கூறினார்.

தி.மு.க. தொழிலாளர் தரப்பில் கூறும்போது, 'தொழிற்சாலைக்கு உள்ளேயும் வெளியேயும் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு அளிக்கவேண்டும்' என்று அவர்கள் வற்புறுத்தினர்.

அடுத்த வாரம் மூன்றாவது கட்டப் பேச்சுவார்த்தை நடக்கும்; அது இறுதிப் பேச்சுவார்த்தையாக இருக்கும்; முதலமைச்சர் முன்னிலையில் இது நடைபெறும்."

தேசிய முதியோர் கல்விக் கழகக் கூட்டம்

புதுடில்லியில் நடைபெறும்

கல்வியமைச்சர் நாவலர் கலந்துகொள்கிறார்

சென்னை, ஜூலை 20—

புதுடில்லியில் நடைபெறும் தேசிய முதியோர் கல்விக் கழகக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகக் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இன்று மாலை 6-30 மணியளவில் விமானம் மூலம் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

ஆவடித் தொழிற்சாலைத் தகராறில் உடன்பாடு

அமைச்சர் என். வி. நடராசன் யோசனையை நிர்வாகம் ஏற்றுக்கொண்டது

சென்னை, ஜூலை 20—

ஆவடியிலுள்ள ரெடிமேட் ஆடைகள் தயாரிப்புத் தொழிற்சாலைப் பிரச்சினையில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மேற்கொண்ட பேச்சுவார்த்தை வெற்றிபெற்றது.

இதன் தொடர்பாக அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது :—

"ஆவடியில் உள்ள ரெடிமேடு ஆடைகள் தொழிற்சாலையில் ஒரு நாள் வேலைநிறுத்தம் காரணமாக 300 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டதுபற்றி இந்தியத் தேசியத் தொழிற்சங்கத் தலைவர் ரங்கசாமி என்னிடம் முறையிட்டுக்கொண்டார்.

அதன்பேரில் இரு தரப்பினரையும் அழைத்துப் பேசி -- அந்த 300 பேரையும் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கூறிய யோசனையை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொண்டனர்."

பெரியார் உடல் நிலை

சென்னை, ஜூலை 20—

திராவிடர் கழகத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் உடல் பரிசோதனைக்காகவும் -- ஓய்வு கருதியும் சென்னைப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

கவலை கொள்ளத்தக்கவண்ணம் ஏதும் இல்லை என்றும், ஐயா அவர்கட்கு ஓய்வு நிரம்பத் தேவைப்படுவதால் அருள்கூர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும், திரு. கி. வீரமணி, ஓர் அறிக்கை மூலம் அனைவரையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

ஜூலை 21 காலை 9-45 மணி: திட்டக்குடி வைத்தியநாதசுவாமி கோயிலைப் பார்வையிடல்--திட்டக்குடி நகர தி.மு.க. வரவேற்பு, 10-30 மணி: ஆவட்டி வரதராசப் பெருமாள் கோயில் திருப்பணித் துவக்கவிழாவும் -- மின் விளக்கு ஏற்று விழாவும் (மங்களூர் தொகுதி); மதியம் 12 மணி: மங்களூர் தொகுதி ம. புடையூர் பெருமாள் கோயில் பார்வையிடல்-- ம. புடையூர் ஊராட்சிமன்ற வரவேற்பு; மாலை 4 மணி: அ. களத்தூர் மாரியம்மன் கோயில் திருப்பணித் துவக்கவிழா; 5 50 மணி: சிறுபாக்கம் ஊராட்சி மன்ற வரவேற்பு; 6 30 மணி: மங்களூர் ஊராட்சி ஒன்றிய வரவேற்பும்-- மங்களூர் ஊராட்சிமன்ற வரவேற்பும்.

இந்திரா காங்கிரசு அலுவலகத்தில் 'சகுனி'களின் அவசரச் சந்திப்பு

அரசியல் முக்கியத்துவம் இல்லையாம்

சென்னை, ஜூலை 19—

"புரசைவாக்கத்தில் உள்ள புதுக் காங்கிரசுக் கட்சி அலுவலகத்தில் காரியக் கமிட்டிக் கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது அங்கு கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் எம். கல்யாணசுந்தரம் வந்துசேர்ந்தார்.

'காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த மத்திய அமைச்சர்களான சுப்பிரமணியம்--மோகன் குமாரமங்கலம் ஆகியோர் கூட்டத்திலிருந்து வந்து கல்யாணசுந்தரத்துடன் சுமார் அரை மணி நேரம் தனியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"மரியாதைச் சந்திப்பு இது; அரசியல் முக்கியத்துவம் எதுவும் கிடையாது' என்று பேச்சுவார்த்தைக்குப் பிறகு கல்யாணசுந்தரம் நிருபர்களிடம் தெரிவித்தார்.

"விவசாயிகள் கிளர்ச்சி--சமரசப் பேச்சுவார்த்தை ஆகியவை குறித்தும் மத்திய அமைச்சர்களுடன் கருத்துப் பரிமாறிக்கொண்டதாக அவர் சொன்னார்."

—'தினமணி'ச் செய்தி

மதுரை மாநாடு

மாநகர அலங்காரக் குழு நியமனம்

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாட்டுத் தொடர்பான செயல் முறைகள் பற்றி, மாநகராட்சி தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம், 17—7—72-ல் மாநாட்டு அலுவலகத்தில் நடைபெற்றது.

வரவேற்புக் குழுத் தலைவர் மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் மாநாட்டுச் செயல் திட்டங்களை விளக்கிக் கூறினார்.

மதுரை மாநகர் முழுவதும் சிறப்புற அலங்காரங்கள் செய்வது பற்றி அலங்காரக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

மாநகராட்சிமன்ற உறுப்பினர்களான திரு. எம். ஏ. பூவலிங்கம், திரு. எம். நடராசன், திரு. வ. இராமசாமி, திரு. அ. கு. மதிவாணன், திரு. செண்பகசுந்தரம் என்ற மணி ஆகியோர் இக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

விவசாயிகள் கோரிக்கை --- பேச்சுவார்த்தையில் தீர்வு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றம் செய்வதாகவும் இருக்கும்.

தண்டத் தீர்வைக்கு தற்காலத் தடையுத்தரவு

கோரிக்கை 5 :—பாசனக் கட்டுப்பாட்டை நீக்கி தண்டத் தீர்வை போடுவதைக் கைவிட வேண்டும்.

உடன்பாடு 5 :—ஏற்கனவே இதற்கான தற்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது; இதுபற்றி இந்தப் பகுதிகளின் விவசாயிகள் மாநாட்டைக் கூட்டிப் பரிசீலித்து தக்க முடிவு எடுக்கப்படும்.

பாசனமற்ற பகுதிகளுக்கு நீர்ப்பாசன உத்தரவு

கோரிக்கை 6 :—பாசனமற்ற பகுதிகளுக்கு உடனடியாக நீர்ப்பாசன உத்தரவாதம் செய்யப்படவேண்டும்; அதுவரையில் அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்த வேண்டும்.

உடன்பாடு 6 :—இது பற்றித் திட்டக் குழுவுடனும், கேரள அரசுடனும் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும்.

பயிர்ப் பாதுகாப்பு

கோரிக்கை 7 :—விவசாயிகள் -- கால்நடைகள் -- பயிர்ப் பாதுகாப்பு (இன்ஷ்யூரன்சு) செய்யப்படவேண்டும்.

உடன்பாடு :—மாநில அரசுக்கு இந்தக் கொள்கையில் உடன்பாடு உள்ளது; இது பற்றி மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.

இனும் நிலங்கள் பிரச்சினை

கோரிக்கை 8 :—இனாம் ஒழிப்பு சட்டத்தில் தகுந்த திருத்தங்களை செய்து -- இனாம் நிலங்களை உழுது கொண்டிருக்கும் உழவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கவேண்டும்.

உடன்பாடு 8 :—இந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்படும்.

கோரிக்கை 9 :—விவசாய வேலைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மரணமடைந்த குடும்பங்களுக்கும் அரசு நிவாரணம் அளிக்கவேண்டும்.

பொதுநல நிதி

உடன்பாடு 9 :— விவசாயத் தொழிலாளர்கள்-- விவசாயிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் மாவட்ட வாரியாக விவசாயத் தொழிலாளர் பொதுநல நிதியை உருவாக்கவும், அதற்கு அரசின் சார்பில் ஈட்டு நிதி கொடுக்கவும் பரிசீலிக்கப்படும்.

குடியிருப்பு மனைகள் -- சட்டம் விரைவுபடுத்தப்படும்

கோரிக்கை 10 :— விவசாயத் தொழிலாளர்களுக்கும்-- கிராமப்புற ஏழை மக்களுக்கும் அரசு செலவிலேயே குடியிருப்பு மனை நிலம் வழங்கி வீடு கட்டிக் கொடுக்க வேண்டும்; விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் முழுவதுக்கும் கூலி நிர்ணயச் சட்டம் வேண்டும்.

உடன்பாடு 10 :—குடியிருப்பு மனை நிலம் ஏழை மக்களுக்கும்-- விவசாயத் தொழிலாளர்களுக்கும் வழங்குவது பற்றி மாநிலம் முழுவதும் சட்டத்தை விரிவாக்க முயற்சி விரைவுபடுத்தப்படும்; விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் முழுவதும் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவருவதற்கு அதுபற்றி ஆராய ஒரு குழு நியமிக்கப்படும்.

தரிசு நில விநியோகம்

கோரிக்கை 11 :—வனத் தரிசு -- புறம்போக்கு நிலங்களை அந்தந்தப் பகுதிகளிலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

உடன்பாடு 11 :—வனத் துறையில் இப்போதே காடுகள் இல்லாத நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன; இந்த ஆண்டு ஐம்பதாயிரம் ஏக்கர் நிலம் பகிர்ந்தளிக்கப்படுவதற்குத் திட்டம் உள்ளது; புறம்போக்கு நிலங்கள் இலட்சக்கணக்கானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது; விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத்தான் இதுபோன்ற நிலங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கை தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.

நீதி விசாரணை ரத்து

அமைதியும் -- சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு ஏற்ற வகையில், எந்தமட்டத்தில அளவிலும் (தலைமை நீதிமன்ற அளவிலோ -- மற்ற மாநில நீதிபதிகள் என்ற அளவிலோ) நீதி விசாரணை தேவையில்லை என்பதையும், இதன் தொடர்பான வழக்குகள் அனைத்தையும் கைவிட வேண்டும் என்பதையும் இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விவசாய சங்கம் நன்றி

சுமுகமான உடன்பாடு ஏற்பட உதவியதற்காக முதலமைச்சருக்கும் -- அவரது சகாக்களுக்கும் விவசாயிகள் சங்க அமைப்பாளர் நாராயணசாமி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

உடன்பாடு ஏற்பட ஒத்துழைத்ததற்காக, அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்து முதலமைச்சர் கலைஞர் பேசினார்.

அரிசன நல அமைச்சர்கள் மாநாடு

திருமதி சத்தியவாணிமுத்து கலந்துகொள்வார்

சென்னை, ஜூலை 20—

இத்திங்கள் 23-ம் நாளன்று புதுடில்லியில் தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்கள் மாநாடு நடைபெறும்.

அனைத்து மாநிலங்களையும் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்வர்.

தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களும் இம்மாநாட்டில் கலந்துகொள்ள ஜூலை 22-ந் தேதியன்று புதுடில்லிக்குப் புறப்பட்டுச் செல்கிறார்; மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு 25-ந் தேதி பிற்பகல் சென்னைக்குத் திரும்புவார்.

அனைத்திந்தியச் சட்டப் பேரவைத் தலைவர்கள் மாநாடு

திரு. கே. ஏ. மதியழகன் பம்பாய் புறப்பாடு

சென்னை, ஜூலை 20—

அனைத்திந்தியச் சட்டப் பேரவைத் தலைவர்கள் மாநாடு ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம்; கடந்த ஆண்டில் இம்மாநாடு, மத்தியப் பிரதேசத்திலுள்ள போபால் நகரில் நடைபெற்றது.

இம்மாநாட்டை இந்த ஆண்டில் எங்கு நடத்துவது -- எப்படி நடத்துவது என்பதுபற்றி விவாதித்து முடிவு செய்ய ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

5 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவில், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களும் இடம் பெற்றிருக்கிறார்.

இந்த ஆலோசனைக் குழு கூட்டம் ஜூலை 21-ம் நாள்முதல் 24-ம் நாள் வரையில் பம்பாயில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ள திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் இன்று பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்றார்; கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு 27-ம் நாள் இரவு 7-15 மணியளவில் சென்னை வந்து சேருவார்.

கங்கை -- காவிரி இணைப்புத் திட்டம்

"கங்கையைக் காவிரியுடன் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த 30 ஆண்டுகள் ஆகும்"

என்று, மைசூர் நீர்ப்பாசனத் துணை அமைச்சர் நஞ்சே கௌடா, மைசூர் மேலவையில் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.